மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சச்சிதானந்தம் | ஜாதி | |
| த/பெ. | தங்கவேல் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 67 /2022 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 27-10-.2022 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன பரிகாரத்திற்காக வழக்குப் போட்டுள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்குச் சொந்தமானது என்று வழக்குப் போட்டுள்ளேன். தாவா சொத்தின் புல எண் விஸ்தீரணம் குறிப்பிட்டு நான் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. பத்திரப்படி வழக்குப் போட்டுள்ளேன்.

2) நான் வழக்கு எந்த வருடம் போட்டேன் என்றால் 2013 ஆம் ஆண்டு போட்டேன். நாளது தேதிவரை தாவா சொத்தின் புல எண் என்ன என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3) காத்தாயி அம்மாள் உடன் பிறந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால் அவருக்கு சகோதரிகள் இருந்து இறந்து விட்டார்கள். காத்தாயி அம்மாளுக்கு இரண்டு சகோதரிகள் அவர்கள் பெயர்கள் குப்பம்மாள், பிரகதம்மாள், ஆகும். சம்பூரணத்தம்மாளுக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 5 பேர் ஆகும். என்னுடைய வழக்குரையில் சம்பூரணத்தம்மாளின் வாரிசுகள் சொல்லப்படாமல் தான் வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4) தாவா வழக்கை கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற அடிப்படையில் நான் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களின் அசல் எங்கு உள்ளது என்றால் அசல் ஆவணங்கள் மழையில் நனைந்து அழிந்து விட்டது.

5) நான் சொல்வது தவறு என்றாலும் ஒரு இடத்தை விற்கும் போது மூல ஆவணங்கள் கிரையம் வாங்குபவர் வசம் சென்று விடும் என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) காத்தாயிஅம்மாள் கிரையம் வாங்கிய பிறகு அவர் பெயருக்கு வருவாய்ப்பதிவு ஏற்பட்டதா என்றால் பட்டா அவர் பெயருக்கு ஏற்பட்டுள்ளது. நான் காத்தாயி அம்மாள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

7) காத்தாயி அம்மாள் பெயரில் எந்த ஆண்டு எந்தப் பட்டா எண்ணில் பட்டா ஏற்பட்டது என்றால் நான் காத்தாயி அம்மாள் பெயரில் ஏற்பட்ட நகர நில அளவை பட்டாவை பார்த்தேன். அறந்தாங்கியில் எந்த ஆண்டு நகர நில அளவை ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

8) நான் சொல்வது போல் காத்தாயி அம்மாளுக்கு நகர நில அளவையில் பட்டா ஏற்படவில்லையென்றாலும் அவ்வாறு பட்டா ஏற்பட்டு இருந்தால் என்னால் மேற்படி பட்டாவின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்து இருக்க முடியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) நான் தாவா சொத்து உள்ள தெருவில் தற்போது குடியிருக்க வில்லையென்றால் சரிதான். எனக்கு தாவா சொத்தை 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் கிரையம் வாங்கியது எப்போது தெரியும் என்றால் 2013 ஆம் ஆண்டு தெரியும்.

10) நான் 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் தாவா சொத்தை அளக்க வந்தபோது வருவாய் ஆவணங்களை எடுத்துப் பார்த்தேனா என்றால் நான் என்னுடைய பத்திரத்தை தான் எடுத்துப் பார்த்தேன். வா.சா.ஆ. 1 மற்றும் 2 ஆவணங்கள் நான் எந்த தேதியில் சான்றிட்ட நகல் பெற்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

11) வா. சா. 1 மற்றும் வா.சா.2. ஆவணங்களின் சான்றிட்ட நகலை நான் 1, 3 பிரதிவாதிகள் அளவை செய்ய வருவதற்கு முன்பு பெற்றேனா அல்லது அளவை செய்ய வருவதற்குப் பின்பு பெற்றேனா என்றால் அளவை செய்வதற்கு பின்பு தான் பெற்றேன். ஆனால் பத்திரம் ஏற்கனவே இருந்தது தான்.

12) என்னிடம் ஏற்கனவே பத்திரம் இருந்த நிலையில் நான் ஏன் சான்றிட்ட நகல் பெற்றேன் என்றால் அந்த ஆவணம் மழையில் நனைந்து சேதம் ஆகிவிட்டதால் சான்றிட்ட நகல் பெற்றேன். நான் சொல்வது பொய் என்றாலும் அசல் ஆவணங்கள் என்னிடம் எந்தக் காலத்திலும் இல்லையென்றாலும் நானாக சான்றிட்ட நகலை வைத்துக் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) 2ம் பிரதிவாதி தாவா வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே உயிருடன் இல்லையென்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். உயிருடன் இல்லாத நபர் மீது எதற்காக எனது அனுபவத்தை தடை செய்வதாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சொத்தை விற்றதற்கான மூல காரணம் 2ம் பிரதிவாதி என்பதால் அவரையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன். நான் சொல்வது போல் 1, 3 பிரதிவாதிகள் என்னிடம் பிரச்சினை செய்யவில்லையென்றாலும் நான் கற்பனையாக தரப்பினர்களை சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

14) 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 1ம் பிரதிவாதி எவ்வளவு விஸ்திர்ணம் கிரையம் பெற்றுள்ளார் என்பது பற்றியும் 1ம் பிரதிவாதியின் மனைவி எவ்வளவு விஸ்திர்ணம் கிரையம் பெற்றுள்ளார் என்பது பற்றியும் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

15) என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி 8.6 சென்ட் கிரையம் பெற்றுள்ளார் என்று ம் அது தவறு என்றும் சொல்லியுள்ளேனா எனக்கு ஞாபகம் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ள கிரையப்பத்திரம் செல்லத்தக்கது இல்லையென்று பிராதில் திருத்த மனு போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். நான்
அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல.

1 6) வா.சா.1, 2 ஆவணத்தில் கண்ட சொத்தின் தற்போதைய புல எண் என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்து என்ன வகைப்பாட்டு நிலம் என்றால் விவசாய நிலம் ஆகும். நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்துக்கள் நகர நில அளவை காலத்தில் நத்தம் மனையாக மாற்றி விட்டார்கள் என்றால் சரியல்ல.

17) தாவா சொத்துக்கு எனது தாயாரோ, அவரது தாயாரான காத்தாயி அம்மாளோ, வரியோ, அல்லது தீர்வையோ செலுத்தியுள்ளார்களா என்றால் காத்தாயி அம்மாள் செலுத்தியுள்ளார். மேற்கண்டவாறு நானோ, எனது தாயாரோ, அல்லது காத்தாயி அம்மாளோ, வரி செலுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

18) தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் கிரையம் வாங்கி அவர்கள் பெயரில் பட்டா மாற்றி அரசுக்கு வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. அது எங்களுடைய சொத்து 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் கிரையம் வாங்கிய பத்திரத்தில் நான்கெல்லையில் காத்தாயி இடம்

காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர்கள் கிரையம் வாங்கியதே காத்தாயி சொத்து தான்.

19) காத்தாயி அம்மாளின் சொத்தை கிரையம் கொடுத்தவர்களை நான் ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லையெ ன்றால் கிரையம் கொடுத்தவர்கள் இறந்து விட்டார்கள். அவர்கள் வாரிசுகள் தான் இருக்கிறார்கள். கிரையம் கொடுத்தவர்கள் வாரிசை நான் ஏன் வழக்கில் சேர்க்கவில்லையென்றால் கிரையம் வாங்கியவர்கள் தான் பிரச்சினை செய்தார்கள். அவசிய தரப்பினரை சேர்க்காததால் தாவா வழக்கு குறையுடையது என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதிவசமும் 3ம் பிரதிவாதி வசமும் உள்ளது என்றாலும் அவர்கள் பட்டா மாற்றி வரி செலுத்தி வருகிறார்கள் என்றாலும் நான் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20) 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி கிரையம் வாங்கிய சொத்து மொத்த விஸ்தீர்ணம் 16 செண்ட்டுக்கு அவர் பெயரில் பட்டா மாற்றியுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நகர புல எண் தெரிந்து கொண்டே பழைய ஆவண்ங்களை நகல் எடுத்து பொய்யாக வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்குப் படி எனக்கு எந்தப் பரிகாரமும் கிடைக்கத்தக்கது இல்லையென்றால் சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இனங்க 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.